செ.வெ.எண்: நாள்:17.06.2021

# நாமக்கல் மாவட்டம்

**நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பிரிவில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தன்பாதுகாப்பு கவச உடையணிந்து இன்று (17.06.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.06.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாமக்கல் மாவட்டத்தில் சுகாதாரத்துறை, மருத்துவத்துறை, நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா சிகிச்சை, காய்ச்சல் முகாம் நடத்துதல், கொரோனா நோய்த்தொற்று பரிசோதனை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார். உள்ளாட்சி, நகராட்சி பகுதிகளில் வீடு, வீடாக சென்று பல்சாக்சி மீட்டர் கருவி கொண்டு ஆக்சிஜன் அளவு பரிசோதனை செய்தும், உடல் வெப்பநிலையை இன்ப்ராரெட் தெர்மாமீட்டர் கருவி கொண்டு பரிசோதனை செய்தும், பொதுமக்களிடம் விவரங்கள் கேட்டு அதன் அடிப்படையில் கொரோனா நோய்த்தொற்று இருக்க வாய்ப்பு உள்ளவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு, சிகிச்சை அளித்தல், தனிமைப்படுத்துதல் நடவடிக்கைகள் ஆரம்ப நிலையிலேயே மேற்கொள்ளப்படுவது குறித்தும் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு கடந்த ஒன்றறை ஆண்டு காலமாக பொதுமக்களை காக்கும் பணியாற்றி வரும் அனைத்துத்துறை அலுவலர்களையும் பாராட்டுகின்றேன். இவ்வளவு நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் நாமக்கல் மாவட்டம் தளர்வுகள் அளிக்க முடியாத நோய்த்தொற்று அதிகம் உள்ள மாவட்டங்களில் ஒன்றாகத்தான் உள்ளது. இந்த நிலையை ஒன்றிரண்டு வாரங்களுக்குள் மாற்றி முழுமையாக நோய்த்தொற்று கட்டுப்படுத்தப்பட்ட மாவட்டமாக உருவாக்க வேண்டும்.

எனவே உள்ளாட்சி நிர்வாகங்கள் தங்கள் பகுதியில் வீடு, வீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி சரியாக நடைபெறுவதை உறுதி செய்வதுடன், சளி, இருமல், காய்ச்சல் உள்ள நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ள உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கி, நோய்த்தொற்றின் ஆரம்ப நிலையிலேயே தங்களது தந்தை, தாய் அல்லது மகன், மகள் போன்ற உறவினர்களை அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதாரநிலையங்களுக்கு அழைத்து வந்து பரிசோதனை செய்து, சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெற்றவர்கள் விரைவாக குணமடைவதுடன், ஆசாதாரண சூழ்நிலை ஏற்படாவண்ணம் தடுக்க முடியும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, கோட்டாட்சியர்கள் திரு.மு.கோட்டைக்குமார், திருமதி.தே.இளவரசி, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.த.கா.சித்ரா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.எஸ்.சோமசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி.சி.சித்ரா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) திரு.பச்சைமுத்து உள்பட அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்லைவர் அவர்கள் நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தன் பாதுகாப்பு கவச உடையணிந்து கொரோனா சிகிச்சை பிரிவிற்கு சென்று பிரிவில் சிகிச்சை பெற்று வரும் அனைத்து நோயாளிகளுக்கும் வழங்கப்படும் சிகிச்சை குறித்து ஒவ்வொருவராக கேட்டறிந்தார். அப்போது நோயாளிகளின் நுரையீரல் தொற்றின் அளவு குறித்து சி.டி ஸ்கேன் அறிக்கையை காட்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தொற்றின் தன்மை குறித்தும், அளிக்கப்படும் சிகிச்சை குறித்தும் விளக்கினார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நோயாளிகளிடம் தாங்கள் அழைத்தால், மருத்துவர்கள் செவிலியர்கள் வருகின்றார்களா என்று கேட்டு, மருத்துவ உதவி உடனுக்குடன் நோயாளிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்தார். மேலும் உணவு வழங்கப்படுவது குறித்தும், தரம் மற்றும் சுவையின் திருப்தி குறித்தும் நோயாளிகளிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தா அருள்மொழி, நிலைய மருத்துவ அலுவலர் மரு.கண்ணப்பன் உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**

தமிழ்நாடு அரசு கொரோனா நோய்த்தொற்றை தடுக்கும் வகையில் நோய்த்தொற்றின் தீவிரத்தை கருத்தில் கொண்டு 14.06.2021 காலை 6.00 மணி முதல் 21.06.2021 காலை 6.00 மணி வரை முழு ஊரடங்கு அறிவித்துள்ளது.

வெளிநாடுகள் மற்றும் இதர மாநிலங்களிலிருந்து விமானம் மற்றும் இரயில் போக்குவரத்து மூலம் வரும் பயணியர்களை தொடர்ந்து கண்காணிக்க இ-பதிவு முறை (e-Registration) தொடர்ந்து செயல்படுத்தப்படும்.(https://eregister.tnega.org).இரயில் மற்றும் விமான நிலையங்களுக்கு பயணிகள் சென்று வர, பயணச் சீட்டுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பணிகளான பால் விநியோகம், தினசரி பத்திரிகை விநியோகம், தனியார் விரைவுத் தபால் சேவை(Courier service), மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், மருந்தகங்கள், ஆம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள் போன்ற மருத்துவத்துறை சார்ந்த பணிகள், அனைத்து சரக்கு வாகனங்கள் போக்குவரத்து, விவசாயிகளின் விளை பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள், ஆக்சிஜன் வாயு எடுத்துச் செல்லும் வாகனங்கள், எரிபொருளை (petrol, Diesel & LPG etc.,)எடுத்துச்செல்லும் வாகனங்கள் ஆகியவை முழு ஊரடங்கின் போது அனுமதிக்கப்படும். பெட்ரோல் மற்றும் டீசல் பங்குகள் (petrol/Diesel /Bunks) தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்திக்கு தேவையான பூச்சிக்கொல்லி, உரம், விதை விற்பனை செய்யும் கடைகள், மாட்டுத்தீவனம் விற்பனை செய்யும் கடைகள், காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

முழு ஊரடங்கு அமலில் உள்ள நாட்களில், உணவகங்களில் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரையிலும், நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 3.00 மணி வரையிலும், மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் பார்சல் சேவை மட்டும் அனுமதிக்கப்படுகிறது. Swiggy, Zomato போன்ற மின் வணிகம் (e-commerce) மூலம் உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்கள் மேற்கண்ட நேரங்களில் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. சாலையோர உணவகங்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

காய்கறி மற்றும் பூ விற்பனை செய்யும் நடைபாதை கடைகள் நண்பகல் 12 மணி வரை அனுமதிக்கப்படும்.

நியாய விலைக் கடைகள் காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை செயல்படும்.

தன்னார்வலர்கள் வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், நோயுற்றவர்களுக்கான சேவை வழங்குபவர்கள் தொடர்புடைய நிறுவனங்கள் வழங்கும் அடையாள அட்டை / ஆவணங்களுடன் சென்று வர அனுமதிக்கப்படுகிறது.

தொழிற்சாலைகள் (Continous process Industries) மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் மட்டும் (Industries Manfacturing Essential

Commodties) செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது. இந்த தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்கள்/அலுவலர்கள் இந்நிறுவனங்கள் ஏற்பாடு செய்யும் பேருந்துகளிலோ அல்லது சொந்த வாகனங்களிலோ இந்நிறுவனங்கள் வழங்கிய அடையாள அட்டையுடன் செல்ல அனுமதிக்கப்படுகிறது.

திருமணம்/திருமணம் சார்ந்த நிகழ்வுகள் (கலந்து கொள்வோர் எண்ணிக்கை 50 நபர்களுக்கு மிகாமல்) மற்றும் இறப்பு சார்ந்த நிகழ்வுகளுக்கு (கலந்து கொள்வோர் எண்ணிக்கை 20 நபர்களுக்கு மிகாமல்) ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுடன் நடத்துவதற்கும் அதில் கலந்து கொள்வதற்கும் எந்தவிதமான தடையுமில்லை.

தொலைத்தொடர்பு மற்றும் அதனைச் சார்ந்த செயல்பாடுகள் அனுமதிக்கப்படும்.

கிடங்குகளில், சரக்குகளை ஏற்றுவது, இறக்குவது மற்றும் சரக்குகளை சேமித்து வைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

முழு ஊரடங்கின் போது செயல்பட அனுமதிக்கப்படாத தொழில் நிறுவனங்களில், தீ, இயந்திரம் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

வங்கிகள், தானியங்கி பணம் வழங்கும் மையங்கள், வங்கி சார்ந்த போக்குவரத்து, காப்பீடு நிறுவன சேவைகள் அதிகபட்சம் 50 விழுக்காடு பணியாளர்களுடன் அனுமதிக்கப்படும்.

இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள கடைகளில் சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட விதிமுறைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

அரசு அறிவித்துள்ள வழிமுறைகளை அனைவரும் பின்பற்றி கொரோனா நோய்த்தொற்று இல்லாத மாவட்டமாக உருவாக்கிட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், தொற்று அதிகம் உள்ள 11 மாவட்டங்களில் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.